சுருக்கம்

திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா – 15.01.2021 அன்று நடைபெறுதல் - விழாச் செலவினம் ரூ.15,12,000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்)கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த்துறை

அரசு ஆணை (ப) எண். 5

நாள்:12.01.2021
திருவள்ளுவராண்டு 2051
சார்வரி மார்கழி -28-ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.12, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை, நாள்:08.01.2015.
2. அரசு ஆணை (ப) எண்.169, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா)த் துறை, நாள்:27.12.2019.
3. இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை சென்னை, கடிதம் ந.க.எண்.5793/தமிழ்1/2020, நாள்:09.12.2020.

------

ஆணை :

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆண்டுதோறும் நடைபெறும் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழாவிற்கு தொடர் செலவினமாக ரூ.15,12,000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா ஆண்டுதோறும் வாலாயமாக திருவள்ளுவர் திருநாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2021-ஆம் ஆண்டில் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா 15.01.2021 (தைத் திங்கள் 2-ஆம் நாள்) அன்று அமைகிறது. இவ்விழாவில் வழங்கப்படவுள்ள விருதுகளும் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அரசாணைகள் வழங்குதல் ஆகியவை தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பிலும், தந்தை பெரியார் விருது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பிலும், அண்ணல் அம்பேத்கர் விருது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பிலும் வழங்கப்படுகின்றன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி துறை இயக்குநரின் கடிதத்தில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவிற்கான ஏற்பாடுகள் ஆண்டுதோறும் செய்தித் துறையால் அரசிடம் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில், சென்ற ஆண்டு 20.01.2020-ஆம் நாளன்று நடைபெற்ற இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசிடம் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளப்பட்டன. அதைப்போன்று, எதிர்வரும் 15.01.2021-ஆம் நாளன்று நடைபெறவுள்ள திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா குறித்த ஏற்பாடுகளை செய்தி மக்கள் தொடர்புத் துறையால் மேற்கொள்ள ஆவன செய்யுமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு விருதுகள் வழங்கும் விழா 15.01.2021 (தைத் திங்கள் 2-ஆம் நாள்) அன்று கொண்டாடுவதற்கு இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள செலவினங்களை தமிழ்நாடு நிதிவிதியியல் கோட்பாடுகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, ரூ.15,12,000/-க்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2220 செய்தி மற்றும் விளம்பரம்-60 ஏனையவை-106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AI வெளியிடுதல் - 308 விளம்பரமும் பிரச்சாரமும் - 09 ஏனையவை" (த.தொ.கு.2220-60-106-AI–0893) Old DPC. (த.தொ.கு.2220-60-106-AI–30809) IFHRMS.

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.15,12,000/-ஐ (ரூபாய் பதினைந்து இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2020-2021-ஆம் நிதி ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-09 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (த.வ.(ம)செ/வரவு செலவு பொ-I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -09 அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்த தொகையினை, தமிழ்நாடு நிதித் தொகுப்பு, தொகுதி 1-இல் விதி 99-இன்கீழ் முன்பணமாக பெற்று இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை அவர்களின் முன் ஒப்புதல் பெற்ற பின்பு இத்துடன் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்களை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு வழங்க அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இந்த முன்பணத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (கணக்கு)த் துறையின் கணக்கு அலுவலருக்கு (செய்தி) வழங்குமாறு, சம்பள கணக்கு அலுவலர், சென்னை - 09 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.1555/தவ(ம)செ/2020, நாள்.12.01.2021 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.1415(ஆயிரத்து நானூற்று பதினைந்து)–உடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு துணைச் செயலாளர், சென்னை-9
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை – 8
இணை இயக்குநர் (கள விளம்பரம்), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9
கணக்கு அலுவலர் (செய்தி), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
சென்னை-9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-9 (கணக்குப் பிரிவு வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18

<u>நகல்:</u>
நிதி (வரவு செலவு/ பொது I மற்றும்II)/த,வ (ம) செய்தி(வ.வ-I)த் துறை, சென்னை-9
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(கணக்கு/வரவு செலவு)த்துறை,சென்னை-9
இருப்பு கோப்பு / உதிரி படிகள்
.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்